## ‘எந்தத் துறைக்கு யார் அமைச்சர்’ என்றே தெரியவில்லை!

# எங்களது கேள்விகளுக்கும் - உரிய பதிலை அமைச்சர்கள் அளிப்பதுமில்லை!

## கண்டித்து வெளிநடப்பு – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி !

சென்னை, ஆக.19-

**சட்டப்பேரவையில் வெளிநடப்புக்குப் பின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “எந்தத் துறைக்கு யார் அமைச்சர் என்றே தெரியவில்லை; அமைச்சர்களும் எங்கள் கேள்விகளுக்கு உரிய பதிலும் அளிப்பதில்லை. இதனைக் கண்டித்து வெளி நடப்பு செய்துள்ளோம்” என்று கூறினார்.**

சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்ததும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

“கோவையில் மாணவர் அமுதன் 10 நாட்களுக்கு முன்பு போதைப்பொருள் கடத்துகின்ற கும்பலைப் பற்றி காவல் துறையிடம் விவரங்களையெல்லாம் கூறியதற்காக காவல்துறை என்ன செய் திருக்க வேண்டும்? சரியான நடவடிக்கை எடுத்து, போதைப் பொருளைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும்.



### விநியோகம் செய்யும் கும்பல்

அந்த மாணவன் அமுதன் யார் மீது புகார் கொடுத்தாரோ, யார் போதைப் பொருள் கடத்துகிறார்கள், யார் விநியோ கம் செய்கிறார்கள் என்று கூறினாரோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, அந்த போதைப்பொருள் விநியோகம் செய் கின்ற கும்பலை அழைத்து, `இந்த அமு தன்தான் உங்களைப் பற்றிய அனைத்து விவரங்களையும் கொடுத்திருக்கிறார்’ என்று கூறியதனால், அந்த போதைப் பொருள் விநியோகம் செய்யும் கும்பல் அமுதன் அவர்களைக் கிட்டத்தட்ட 20 பேரைக் கொண்ட ஒரு கும்பலாகச் சேர்ந்து அடித்து, 5 நாட்களுக்கு முன்பு படுகொலை செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, நேற்று முன்தினம் திருவொற்றியூரில் இதேபோல தனுஷ் என்ற மாணவர், 20 பேரைக் கொண்ட ஒரு கும்பலால் தாக்கப்பட்டு பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்ப டித் தொடர்ந்து போதைப்பொருளால் இன் றைக்குப் பல்வேறு சட்டம்ஒழுங்குப் பிரச் சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. இதை யெல்லாம் சுட்டிக்காட்ட வேண்டும் என்று இந்த அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல் வதற்காக இன்றைக்கு நாம் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களும் சட்டமன்றத்தில் அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசியிருக் கிறோம்.

### பழியைப் போடுகின்ற வழக்கம்

ஆனால், இதற்கெல்லாம் எந்தவித மான ஒரு சரியான பதிலும் இந்த அரசிடம் இல்லை. மாறாக எங்கள் மீது மீண்டும் குற்றச்சாட்டு வைக்கிறார்கள். உங்களது ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று ஒரு தெளிவான விளக்கம் இல்லாமல், எங்கள் மீது மீண்டும் பழியைப் போடுகின்ற வழக்கத்தையே இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமன்றி, நான் பல முறை இந்த மூன்று மாதங்களாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். எந்தத் துறைக்கு யார் அமைச்சர் என்பதே சரியா கத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், இந்த அரசில் அந்தந் தத் துறை அமைச்சர்கள் அந்தந்த துறைக்கான பதிலையே சொல்ல மறுக்கிறார்கள்.

### வெளிநடப்பு செய்திருக்கிறோம்

இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம், போதைப் பொருள் தடுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முழுப் பொறுப் பேற்க வேண்டியவர் யார் என்பது மக்க ளுக்குத் தெரியும். அந்த அமைச்சர் இன் றைக்கு அவைக்கு வரவே இல்லை. அதற்கான பதிலையும் அவர் சொல்லவே இல்லை. இதையெல்லாம் கண்டித்து திரா விட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு வெளிநடப்பு செய்திருக்கிறோம்.

### பேட்டி

**செய்தியாளர்:** *மீண்டும் அவை நட வடிக்கையில் கலந்துக்குவீங்களா?*

**உதயநிதி ஸ்டாலின்:** ஆம். மீண்டும் அவை நடவடிக்கையில் கலந்துகொள் வோம்.

**செய்தியாளர்:** *எதிர்க்கட்சிகள் வெளி நடப்பு செய்துவிடுகிறார்கள்னு சொல்றாங்க. அதைப் பற்றி...*

**உதயநிதி ஸ்டாலின்:** முறையான பதில் வேண்டும் என்றுதான் கேட்கிறோம். அதற்கான அமைச்சர்தான் வரவில் லையே? அமைச்சர்தானே எழுந்து பதில் சொல்ல வேண்டும்? சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் யார் என்பது மக்களுக்குத் தெரியும்.

**செய்தியாளர்:** *நீங்கள் சொன்ன குற் றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கானு கேட்கிறாரே?*

**உதயநிதி ஸ்டாலின்:** அந்த காணொலி எப்போது வெளியே வந்தது? ஒரு மாதத் திற்கு முன்னால் வந்தது. அப்படி காணொலி வந்தால், வந்த உடனே நட வடிக்கை எடுக்க வேண்டும். அப்படியென் றால் இந்த அரசுதானே நடவடிக்கை எடுக்க வேண்டும்? அவரை அழைத்து விசாரித்தார்களா? அப்படியென்றால், அந்த அமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா, அது போதைப் பொருள்தான் என்று ஒப்புக்கொள்கிறாரா?

**செய்தியாளர்:** *அப்போ மைதானத் தைச் சுற்றிலும் காவல்துறை இருந் தது என்கிறாரே?*

**உதயநிதி ஸ்டாலின்:** அப்படியென்றால், அந்த அமைச்சர் ஒப்புக்கொள்கிறாரா, அது போதைப் பொருள்தான் என்று ஒப் புக்கொள்கிறாரா? நான் என்ன சொல்கி றேன் என்றால், இந்த வீடியோ எப்போது வந்தது? இப்போது வந்தது வீடியோ, ஒரு மாதத்திற்கு முன்பு வந்தது. எனவே இந்த அரசு அவரை அழைத்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எங்களுடைய அரசாக இருந்திருந்தால், நிச்சயம் நடவ டிக்கை எடுத்திருப்போம். ஆனால் இந்த வீடியோ வெளிவந்ததே இப்போதுதான்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டியளித்தார்..

---

# த.வெ.க. ஆட்சியில்தான் போதைப் பொருள் கலாச்சாரம் அதிகரிப்பு!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு!... முதல் பக்கத் தொடர்ச்சி

அந்த விருது எதற்காக என்று பார்த்தீர்கள் என்றால், போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் நடவடிக்கையைச் சிறப் பாக மேற்கொண்டதற்காக, கடந்த ஒரு வருட மாக சிறப்பாகப் பணியாற்றியதற்காக 15 காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்க ளுக்கு முதலமைச்சர் அவர்களே விருது கொடுத்திருக்கிறார்கள். அந்த 15 காவல் களுமே எங்களின் ஆட்சிக் காலத்தில் பல் வேறு வழக்குகளில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை யைச் சிறப்பாக மேற் கொண்டவர்கள் என்று இன்றைக்கு அரசு அறிக்கை கொடுத்திருக்கிறது.

விருது பெற்ற அந்த 15 காவலர்களும் எத் தனை கிலோ போதைப் பொருட்களை பறிமு தல் செய்தார்கள், எத்தனை குற்றவாளிகளைக் கண்டுபிடித்துள்ளார்கள், எவ்வளவு நாட் களுக்கு அவர்களுக்கு எல்லாம் தண்டனை வாங்கிக் கொடுத்துள்ளார்கள், இந்த விவரங் களை எல்லாம், அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெளிவாகச் சொல்லி இருக்கிறீர்கள்.

போதைப் பொருள் தடுப்புக்கு எங்கள் ஆட் சியில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், பிறகு எதற்கு இந்த காவலர்களுக்கு முதல மைச்சர் அவர்கள் விருது கொடுத்தார் என் பதை இங்கு பதிய வைக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சில கேள்விகளைக் கேட் கிறார். அமைச்சர் கேட்கின்ற கேள்விகளுக்கு எல்லாம் நான்தான் பதில் சொல்ல வேண்டும் என்று அடம் பிடிக்கிறார். இன்று நான், அனைத்து எதிர்கட்சித் தலைவர்கள் எல்லாம் சட்டம்ஒழுங்கு சம்பந்தமாக பேசிக்கொண்டு இருக்கிறோம். அது சம்பந்தப்பட்ட அமைச்சர் எங்கே இருக்கிறார். அவர் ஏன் பதில் சொல்ல மறுக்கிறார் என்பதையும் கேட்க விரும்பு கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட் சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை ஆற்றினார்.

ஆகஸ்ட் 13ஆம் தேதி, வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில், பெண் தலைமைக் காவலர் தாமரைச்செல்வி குத்திக் கொலை செய்யப் பட்டுள்ளார்.

இதே நாளில், திருவள்ளூர் மாவட்டம், கும் மிடிப்பூண்டி சாணாபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ரஞ்சன் என்கிற இளைஞரும் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இப்படிக் கொலைகள் மட்டுமல்ல, பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களும் எக்கச்சக்க மாக கடந்த ஒரு வாரத்தில் நடந்துள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 9 வயது சிறுமி பள்ளி முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டி ருந்தபோது, வழியில் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரியில் ஆளுங்கட்சி நிர்வாகிகள் மீதே பாலியல் புகார் கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கின் றன. அந்த மாவட்டத்தில் ஆளுங்கட்சி நிர்வா கிகள் மீது வருகின்ற இரண்டாவது பாலியல் குற்றச்சாட்டு இது. ராணிப்பேட்டையில் ஆளுங்கட்சியின் மாவட்டச் செயலாளர் விஜய் மோகன் மேல் ஒரு பெண், பாலியல் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்.

100 நாள் சாதனை என்று இந்த அரசு பெருமை பேசுகிற இதே நேரத்தில், தமிழ்நாட் டில் சட்டம்ஒழுங்கு இந்த 100 நாட்களில் எந்த அளவுக்கு மோசமாகியிருக்கிறது என்பதற்கு, இந்த சம்பவங்களே சாட்சி.

இதுமாதிரியான சம்பவங்கள் தொடராமல் இருக்க, இந்த அரசு என்னென்ன நடவடிக் கைகள் எடுக்கப் போகின்றது? மிக முக்கிய மாக பள்ளி, கல்லூரிகளில் வன்முறைக்கு எதிராகவும், ஒழுக்கத்தை வளர்த்தெடுக்கவும் கவுன்சிலிங் வகுப்புகளை நடத்த வேண்டும் என்று, இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

போதைக்கு எதிரான தொடர் விழிப்பு ணர்வை ஏற்படுத்த வேண்டும். மிக முக்கிய மாக சட்டம்ஒழுங்குப் பிரச்சினையைக் கட்டுக் குள் கொண்டு வர, இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, எங் கள் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

### அமைச்சர் கதை விட்டார்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே! நம் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு நபரின் பெயரை, இங்கு குறிப்பிட்டு பேசி யிருக்கிறார். அந்த சம்பந்தப்பட்ட நபரின் மீது அப்படி ஒரு குற்றச்சாட்டு எழுந்தவுடன், எங் கள் தலைவர் அவர்கள் அவரைக் கைது செய்து, உடனடியாக அவரைக் கட்சியில் இருந்து நீக்கிவிட்டோம். ஆனால், இவர்கள் ஆட்சி என்ன லட்சணத்தில் நடந்துகொண்டு இருக்கிறது என்பதை மக்கள் இன்று பார்த் துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்க ளின் அமைச்சரே ஐ.பி.எல். மேட்சில் பவுடர் நுணுக்கிக்கொண்டு, மாத்திரை நுணுக்கி னேன் என்று கதை விட்டார். அவரிடம் உங் கள் காவல்துறை ஏதாவது விசாரணை நடத் தியதா? அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுத் திருக்கிறீர்களா?

அதுமட்டுமல்ல, சமீப காலமாக ஆளுங்கட் சியைச் சேர்ந்த பலர் போதைப்பொருள் வழக் கில் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகிறார் கள். அமைச்சர் அவர்கள் பேசியதற்கு, ஏதா வது ஆதாரம் கேட்டு இருக்கிறீர்களா? நாங் கள் உடனடியாக அவரைக் கைது செய்துள் ளோம், அவரைக் கட்சியில் இருந்து நீக்கி இருக்கிறோம். உங்கள் அமைச்சர் ஐ.பி.எல் மேட்சில் பவுடர் நுணுக்கிக்கொண்டு இருந் ததை, இந்த உலகமே பார்த்தது. பல்வேறு விமர்சனங்கள் வந்தன. குழந்தைக்கு மாத் திரை கொடுத்தேன் என்று கதை விட்டார். அதற்காக ஏதாவது விசாரணை நடத்தி இருக் கிறீர்களா, புகார் அல்லது நடவடிக்கை எடுத் திருக்கிறீர்களா என்பதைக் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கடந்த ஒரு வார காலமாக தமிழ்நாட் டில் என்னென்ன சட்டம் ஒழுங்குப் பிரச் சினை, போதைப்பொருளால் என்னென்ன பிரச்சினைகள் நடந்திருக்கின்றன என்று நான் மட்டும் அல்ல, இங்கு இருக்கின்ற அனைத்துத் தலைவர்களும் இந்த அரசின் கவனத்துக்கு எடுத்து வந்தோமே தவிர, அதற்கு எந்த அமைச்சரும் சரியான பதிலைத் தரவில்லை.

அதற்கு மாறாக உங்கள் ஆட்சியில் இப்படி நடந்தது என்று குறை சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அவர் போட்டோ எல்லாம் காட்டினார். எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டி ருக்கிறது என்று சொன்னார். இதிலிருந்து என்ன தெரிகிறது, எங்கள் ஆட்சியில் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எங்கள் ஆட் சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாங் கள் கேட்பது, ஏன் உங்கள் ஆட்சியில் நடவ டிக்கை எடுக்க மாட்டேன் என்கிறீர்கள் என்பது தான். அமைச்சர் அவர்கள் ஒரு போட்டோ காட்டினார். இன்னொரு வீடியோ இருக்கிறது. அதை எல்லாரும் பார்த்தார்கள், ஒட்டுமொத்த இந்தியாவும், உலகமும் பார்த்தது. இங்கு இருக்கிற அமைச்சர் ஒருவர் போதைப்பொ ருளை நுணுக்கிப் போடுகிறார்.

மாடல் ஆட்சியில் இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, போதைப் பொருட்களைத் தொடர்ந்து எங்களின் அரசு பறிமுதல் செய்தது. இது தொடர்பான புள்ளி விவரங்கள் தேவைப்பட்டால், அமைச்சரி டமே இருக்கிறது.

கூடுதல் தகவல் தேவைப்பட்டால் அதை நாம் எங்கேயும் சென்று தேட வேண்டிய அவ சியம் இல்லை.

இன்றைக்கு சென்னை மாநகர கமிஷன ராக நியமிக்கப்பட்டுள்ள அமல்ராஜ் ஐ.பி.எஸ் அவர்களிடம் இந்த அரசு கேட்டால், அவரே இந்த தகவல்களைத் தெளிவாக எடுத்து கொடுத்திடுவார். ஏனென்றால், அவர்தான் இன்றைக்கு கமிஷனராக இருக்கிறார். இந்த இ.பி.சி.ஐ.டி பிரிவுக்குத் தலைமையேற்று நடத்தியவரும் அவர்தான். அவரிடம் கேட் டால் சரியாக சொல்வார். எத்தனை டன் கஞ் சாவைப் பறிமுதல் செய்தோம். எத்தனை பேரை நாங்கள் கைது செய்துள்ளோம். சிறப்பு புகார் எண்கள் எத்தனை அறிவித்தோம்.

## ‘பவுடர் நுணுக்கி’ அமைச்சரிடம் விசாரணை நடத்தப்பட்டதா?

கடந்த 5 ஆண்டுகளாக போதைப்பொருட் களை ஒழிக்க, எங்கள் தலைவர், எங்கள் முதலமைச்சர் சரியான நடவடிக்கை எடுக்க வில்லை என்ற கருத்து இங்கே வைக்கப்படு கிறது. அது தொடர்பாக சில கருத்துகளை இங்கே கூற விரும்புகிறேன். ஆட்சிக்கு வந்த ஒரே ஆண்டில் எங்கள் தலைவர் அவர்கள், `போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு’ என்ற இலக்கோடு மதுவிலக்கு அமலாக்கத் துறை யையும், நார்காட்டிக்ஸ் இன்டலிஜென்ட்ஸ் ஹீரோ, சி.ஐ.டி என்ற இரு பிரிவுகளை ஒன் றிணைத்து இ.பி.சி.ஐ.டி என்ற புதிய பிரிவை உருவாக்கியவர் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அன்றைய முதலமைச்சர் அவர்கள்.

அவர் அன்றைக்கு அப்படிச் செயல்பட்ட தால்தான் கடந்த 5 ஆண்டுகால திராவிட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என இப்படி எல்லா டேட்டாவும் அவரிடம் இருக்கின்றன.

ஒருவேளை எங்கள் திராவிட மாடல் ஆட் சியில் போதைப் பொருளைத் தடுக்கின்ற செயல்பாடுகள் சரியாக நடக்கவில்லை என்று இந்த அரசு எங்களைக் குற்றம் சாட்டியது என் றால், பிறகு எதற்கு அவ்வளவு பெரிய அதிகா ரிக்கு, இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சென்னை மாநகராட்சி ஆணையர் பொறுப் பைக் கொடுத்திருக்கிறீர்கள் என்ற கேள் வியை இந்த அரசுக்கு வைக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத் தல் தடுப்புப் பணியைச் சிறப்பாக மேற் கொள்ளும் காவலர்களுக்கு இரண்டு நாட் களுக்கு முன்பு, நம் முதலமைச்சர் அவர்கள் விருதுகள் எல்லாம் வழங்கி இருக்கிறார்.